DINAMALAR

15 JUNE 2022

PAGE 4




■ புதுச்சேரி பல்கலைக்கழக ஆங்கிலத்துறை வேலைவாய்ப்பு மையம் சார்பில் வளாக வேலைவாய்ப்பு முகாம் நடந்தது.

# புதுச்சேரி பல்கலை.,யில் வேலை வாய்ப்பு முகாம்

**புதுச்சேரி, ஜூன் 15–** புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் நடந்த வேலை வாய்ப்பு முகாமில் 48 மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப் பட்டது.

புதுச்சேரி பல்கலைக் கழக ஆங்கிலத்துறை வேலைவாய்ப்பு மையம் சார்பில் வளாக வேலை வாய்ப்பு முகாம் நடந்தது.

முகாமை மானுடவி யல் புலம் தலைவர் கிள மென்ட் லூர்து துவக்கி வைத்தார். ஆங்கிலத் துறைத் தலைவர் மார்க்ஸ் வரவேற்றார்.

இந்தியா மற்றும் அமெ ரிக்காவில் கிளைகளைக் கொண்ட தேவ் கேர் சொல் யூஷன்ஸ் என்ற மென் பொருள்நிறுவனம்வேலை வாய்ப்பு முகாமில் மாண வர்களை தேர்வு செய்தது.

அனைத்து துறைகளை சேர்ந்த 100க்கும் மேற் பட்ட முதுகலை மாண வர்கள் நேர்முகத் தேர்வில் பங்கேற்றனர். அதில் 48 மாணவர்களுக்கு வேலை வாய்ப்பிற்கான பணி நியமன ஆணை வழங்கப் பட்டது.

ஏற்பாடுகளை வேலை வாய்ப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் ரேஷ்மி, விசாகா தேவி ஆகியோர் செய்திருந்தனர்.

ஏற்கனவே, ஆங்கில துறையைச் சார்ந்த ஏழு மாணவர்களுக்கு ஆங்கில ஆசிரியர் பதவிக்கான பணி நியமன ஆணை களை பட்டுக்கோட்டை டான் போஸ்கோ பள்ளி வழங்கியுள்ளது குறிப்பிடத் தக்கது.